# அன்பின் ஐந்திணைகளில் முருகப்பெருமானின் சிறப்புப் பெயர்கள்

**இரா. வேதகனி**

**முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் ,**

**தமிழ்த்துறை , பச்சையப்பன் கல்லூரி ,**

**சென்னை 600030. vkanionline@gmail.com**

1

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்மொழியின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் முருகனை 'சேயோன்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறது. இதனையே முருகனைப் பற்றிய முதல் பதிவாக எடுத்துக் கொள்ளலாம். அதற்குப் பின் தொகுக்கப்பட்ட சங்க இலக்கியம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற பெரும் பிரிவாக வகுக்கப்பட்டுள்ளது. அகமும் புறமுமாக இரு பெரும் பொருளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் காதலும் வீரமும் சங்க இலக்கியங்களின் இரு கண்களாக போற்றப்பட்டு வருகிறது. எட்டுத்தொகையில் ஐந்து நூல்கள் அகம் பற்றியும் மூன்று நூல்கள் புறம் பற்றியும் பேசுகிறது. அகம் பற்றிய நூல்களை "அன்பின் ஐந்திணைகள்" என்று குறிப்பிடுவர். அவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை மற்றும் அகநானூறு இவை ஐந்தும் அகம் சார்ந்த நூல்களாகும். அகம் பற்றி அதிகமாய் பேசப்படும் நூல்களாயினும் தெய்வ வழிபாடு மற்றும் புராணங்கள் பற்றிய குறிப்புகளும் உள்ளன. சங்கப்பாடல்களில் முருகப்பெருமானின் பிறப்பு, தோற்றம், ஊர்திகள், கொடிகள், ஆயுதங்கள், திருதலங்களான அறுபடைவீடு பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே மரபுச் செய்திகளாகவும் தொன்மச் செய்திகளாகவும் புலவர்கள் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளதை காணலாம். முருகப்பெருமாள் தமிழ் கடவுள். தமிழ் சார்ந்த மரபுகளும் பண்பாட்டுக் கூறுபாடுகளும் கலாச்சாரத் தொன்மைகளும் முருகனைப் பற்றி குறிப்புகள் வரும் இடத்தில் இடம்பெறும். 'குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்குமிடம்' என்ற வழக்காறு நெடுங்காலம் தொட்டு வழங்கி வருகிறது. ஒவ்வொரு குன்றிலும் முருகன் ஒவ்வொரு சிறப்புப் பெயருடன் அழைக்கப்படுகிறான். அன்பின் ஐந்திணைகளில் முருகக் கடவுளைப் பற்றியும் முருகனுக்கு வழங்கி வந்த சிறப்புப் பெயர்கள் பற்றியும் இவ்வாய்வுக் கட்டுரைத் தெளிவாக முன்மொழிகிறது.

**முன்னுரை**

பக்தி மொழியாகவே நம் தமிழ்மொழி அழைக்கப்படுகின்றது. சங்க காலத்தில் சைவம், வைணவம் என்னும் இரு பக்தி மார்க்கம் நிலவி வந்ததை நாம் அறியலாம். சைவ கடவுளர்களான சிவனுக்கும் பார்வதிக்கும் மகனாக முருகன் அவதரித்ததாக புராணங்கள் சொல்கின்றது. சிவபெருமானின் நெற்றிக்கண் நெருப்பிலிருந்து சரவணப் பொய்கை ஆற்றில் ஆறு குழந்தைகள் தோன்றிக் கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்தனர். பார்வதி அம்மை அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்று சேர்த்து அணைக்கும் போது முருகன் தோன்றினார் என்பது புராணங்களில் காணப்படும் குறிப்பாகும். இவ்வாய்வுக் கட்டுரையில் எட்டுத்தொகை நூல்களான அன்பின் ஐந்திணை அகப்பாடல்களில் முருகனுக்கு

வழங்கப்படும் வெவ்வேறு பெயர்கள் குறித்து விரிவாக காணலாம்.

**திறவுச் சொற்கள்**

குன்று, மலை, தெய்வம், கடவுள், அன்பின் ஐந்திணை.

**ஆய்வின் கருதுகோள்**

எட்டுத்தொகை நூல்கள் முழுவதிலும் சைவம், வைணவம் என இரு பிரிவுகளின் கடவுளர்களைப் பற்றி நிறைய குறிப்புகள் உள்ளது. 'அன்பின் ஐந்திணை' நூல்களில் முருகக் கடவுளுக்கு பல்வேறு பெயர்கள் இருப்பது தெரிய வருகிறது. முருகக் கடவுளே தமிழர்களின் முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். முருகு, சேய், நெடுவேள், நெடியோன், கடவுள், தெய்வம், பெருந்தெய்வம், அணங்கு, மலைஉறை, கடவுள், மலையான், விறல்வேள், சேவலங் கொடியோன் இவ்வாறு பல பெயர்களில் முருகக்கடவுள் அழைக்கப்பட்டுள்ளார்.

**ஆய்வின் நோக்கம்**

அன்பின் ஐந்திணையில் தலைவன் தலைவியின் காதல் வாழ்க்கை திருமண வாழ்க்கை பற்றியே அதிகமாக பேசப்பட்டு வந்தாலும் ஆங்காங்கே தெய்வங்கள், தெய்வச் செயல்கள் பற்றிய மக்களின் நம்பிக்கை சார்ந்த செய்திகள் காணப்படுகிறது. குறிஞ்சி நிலத்தின் தெய்வமாக முருகனையே மக்கள் வழிபட்டு வந்தனர். குன்றுகள் தோறும் மலைகள் தோறும் முருகனுக்கு விழா எடுப்பதும் வழிபாடு செய்வதும் முருகனிடம் குறிக் கேட்பதுமாக சங்ககால மக்கள் இறை உணர்வுடனே வாழ்ந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**1) முருகு**

'முருகு' என்ற சொல்லுக்கு 'அழகு' என்று பொருளாகும். முருகன் என்றால் அழகன் என்றே பொருள் கொள்ளலாம். "முருகு என்பது பல பொருள் குறிக்கும் ஒரு சொல். அப்பல பொருள்களுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கன நான்கு. அவை மணம், நீளமாய், கடவுட்டன்மை, அழகு என்பன"1 என்று தமிழ் தென்றல் திரு வி.க அவர்கள் குறிப்பிடுகிறார். அடுத்ததாக 'முருகு' என்ற சொல் வலிமை என்ற பொருளோடும் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது.

**"முருகு உறழ் முன்பொடு கடுஞ் சினம் செருக்கி"** 2

**2) சேய்**

சேய் என்னும் பெயரின் பொருள் 'புதல்வன்' என்றும் 'மகன்' என்றும் சொல்லப்படும். இப்பெயரால் முருகன் ஆன்றோர் சான்றோர் மற்றும் தம்முடைய பக்தர்கள் அனைவருக்கும் சேயாகவே திகழ்கிறார். குறுந்தொகையின் முதல் பாடலிலேயே

**"கழல் தொடி சேஎய் குன்றம்"**3

சிவந்த அம்பினையும் சிவந்த கொம்புடைய யானைகளையும் உடைய கைகளில் வீரக்கழல் அணிந்திருக்கும் பெருமானே குன்றின் மேல் இருப்பவன் சேய் என்று கபிலர் பாடுகிறார். **"வேல்வலான் நிறனே போல் வெருவந்த சேயும்"**4 பெரிய மரமாக தோற்றமளித்து நின்ற சூரனை தம்மிடையே வேலால் வென்ற முருகனின் சிவப்பு நிறம் கொண்ட செவலைக் காளையை அடக்குவோருக்கு தன்

மகளைப் கொடுப்பதாக பாண்டிய நாட்டில் ஆயர்குல சடங்கிற்கு மகளிரை நிறுத்தினர்.

**3) நெடுவேள்**

நீண்ட நெடிய வாளை கையில் ஏந்தி இருப்பவன் முருகன் அதுவே இப்பெயருக்கு காரணம் எனலாம். தமிழர்களின் முதல் கடவுளான முருகன் மக்களைக் காப்பதற்கு மட்டுமல்லாது மக்களுக்குத் துன்பம் தரக்கூடிய எதிரிகளையும் வெட்டி வீழ்த்தக் கூடிய போர் வீரனாகவே காணப்படுகிறான். **"வேலன் வென்றி நெடுவேள்"**5 நற்றிணையில் தலைவி சூடியுள்ள பூ தலைவன் கொடுத்தது என்று அறியாததால் நெடுவேள் முருகனே இதற்கு காரணம் என்று எண்ணுகிறாள். ஆதலால், தலைவி முருகன் தன்னை ஆட்டி வைக்கவில்லை என்ற உண்மையை தாயிடம் கூறுவதால் முருகனுக்கு என்ன குறை வந்துவிடும் என்று ஒரு தோழியிடம் வினவுகிறாள்.

**"படுவண்டு ஆர்க்கும் பைந் தார் மார்பின்**
**நெடுக் வேட்கு ஏதும் உடைத்தோ "**6

நெடுவேலன் மீது வீண் பழி வருவதைத் தலைவி ஏற்றுக் கொள்ளவில்லை என்ற தலைவியின் மனப்போக்கு இங்கு நமக்கு விளங்குகிறது.

**4) நெடியோன்**

கூடல் நகரின் மேற்கு திசையில் மயிற்கொடி எப்போதும் பறந்து கொண்டே இருக்கும். அங்கு எப்போதும் விழாக்கோலம் பூண்ட திருப்பரங்குன்றத்தின் புகழ் இப்பாடலில் சொல்லப்படுகிறது. அவ்வரிகள் முருகனை நெடியோன் என்று குறிப்பிட்டு வருகிறது. திருப்பரங்குன்றம் பற்றியே இப்பாடல் சிறப்பாக சொல்கிறது.

**"நெடியோன் குன்றத்து"**7

**5) கடவுள்**

கடவுள் என்ற சொல் இறைவனைக் குறிக்கும் பொதுப் பெயராகும். நற்றிணை குறிஞ்சி பாடலொன்றில் கடவுள் என்ற சொல் குறிப்பாக முருகனையே சொல்கிறது. கடவுள் என்பவர் அண்டம் முழுவதையும் படைத்து ஒவ்வொரு உயிர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை எல்லா நிகழ்வுகளையும் நடத்துபவனாக நம்பப்படுவது நம்முடைய மரபாகிறது. குறிஞ்சி நில மக்கள் முழுமுதற் கடவுளாக நம்புவது முருகனை மட்டும் தான்.

**"தளிர் ஏர் மேனி தொல் கவின் அழிய**
**பலி பெறு கடவுட் பேணி"**8

**"தன் மலைத் தெறல் அரு மரபின் கடவுட் பேணி"**9

**6) தெய்வம்**

தோழி தாய்க்கு அறத்தோடு நிற்றல் நற்றிணைப் பாடலில் தலைவியின் உடல் நிலை குறித்து தோழி எடுத்துரைக்கிறாள். தோழிக்கு தலைவியின் உடல்நிலை மீது மிகவும் அக்கறை உண்டு. ஆதலால், தாய்க்கு தலைவியின் பசலை நோயை எடுத்துக்கூறி முருக தெய்வத்தை வணங்குவதால் தலைவிக்கு நோய் நீங்காது அவளை திணைப்புலம் காக்க அனுப்பி வைத்தால் நலம் பெறுவாள் என்று

கூறி அறத்தோடு நிற்கிறாள். குறிஞ்சித்திணை என்பதால் இப்பாடலில் தெய்வம் என்று சொல்லப்படும் சொல்லாட்சி முருகனையே குறித்து நிற்கிறது என்று மதுரை கண்ணத்தனார் பாடல் மூலமாக அறிய வருகிறது.

**"எவ்வ நெஞ்சமொடு தெய்வம் பேணி"**10

**7) பெருந்தெய்வம்**

**"நோய்க்கு மருந்தாகா வேற்றுப் பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்தி"** 11

தலைவியின் பசலை நோய்க்கு ஆட்டுக்குட்டி அறுத்து பலியிட்டாலும் திணையரிசிப் படைத்து வழிபட்டாலும் இசைக்கருவி முழங்கி ஊர் புறத்தே செய்து இப்படி மரபின்படி வழிபாடு செய்தாலும் நோய்க்கு மருந்தாக பெருந்தெய்வம் ஆகாது. இப்பாடலில் "வேற்றுப் பெருந் தெய்வம்" என்று குறிப்பிடுவது தோன்றுகிறது எனவும் கொள்ளலாம்.

**8) மலையுறை கடவுள்**

தலைவியை நீங்கிய தலைமகன் பரத்தையிடம் சென்றவிடத்து தலைவியை நினைக்கிறான். தன் தவறு உணர்ந்து தலைவியின் சிறப்பை நினைத்துப் பார்க்கிறான். மலைமீது பூத்துக் குலுங்கும் வேங்கை மலர்களை ஆரமாகக் தொடுத்து முருகனுக்குச் சூட்டிப் பூசை செய்து வாழ்த்தி வழிபடுகிறாள்இ தலைவி. இப்படிப்பட்ட குன்றக் குறவனின் அன்பு மகளை விட்டுப் பிரிந்தேன் என்று வருந்துகிறான். இந்த தலைவனின் குலதெய்வமாக மலையுறை கடவுள் முருகன் என்பதனை ஐங்குறுநூறு பாடல் மூலம் அறிய முடிகிறது.

**"குன்றக் குறவன் காதல் மடமகள்**
**மன்ற வேங்கை மலர் சில கொண்டு**
**மறையுறை கடவுட் குலமுதல் வழுத்தி"**12

**9) மலைவான்**

**"மலைவான் கொண்ட சினைஇய வேலன்"**13

வெறியாட்டு விழாவைப் பற்றிய செய்திகளைக் கூறும் ஐங்குறுநூறு பாடல் இது. தலைவியின் மாற்றத்திற்கு காரணம் முருகன் இல்லை என்றும் வெறியாட்டாளன் சொல்வது பொய்யென்றும் தெரியும். இப்பாடல் வரிகளில் மலையில் வாழ்கின்றவன் முருகன் என்றும் அவன் கடும் சினம் கொண்டவன் என்று குறிப்பு உள்ளது. மலைமீது வாழ்வதால் மலைவான் என்பதும் முருகனுக்கு ஒரு பெயர் ஆகிறது.

**10) விறல் வேள்**

**"மலர்ந்த வள்ளியம் கானங் கிழவோன்**
**ஆண்டகை விறல் வேள் அல்லன்"**14

இப்பாடல் தோழியின் கூற்றாக செவிலிக்கு அறத்தோடு நிற்றல் ஐங்குறுநூற்றின் வரிகளாகும். தலைவிக்கு ஏற்பட்ட பசலை நோய் முருகனால் வந்ததென்று கழங்கு கூறிற்று என்று வெறியாடும் வேலன் சொல்கிறான். ஆனால், முருகன் இதற்கு காரணம் இல்லை என்று தோழி உரைக்கிறாள்.

இப்பாடலில் விறல் வேள் என்று குறிப்பிடப்படுவது முருகனையே ஆகும்.

**11) செவ்வேலான்**

முருகப் பெருமாள் சூரபத்மனைக் கொன்ற புராணச் செய்தி கலித்தொகையில் சொல்லப்பட்டுள்ளது. முருகனின் ஆயுதமான வேல் பகைவர் பலரைக் கொன்று எப்போதும் இரத்தக்கறையுடன் செவ்விய நிறத்தோடு இருப்பதால் செவ்வேல் என்றே குறிப்பிடப்படுகிறது. இச்செய்தியினால் போரில் வல்லவன் முருகக்கடவுள் எனப் புலனாகிறது. முருகப்பெருமானின் அருட்பெரும் செயல்கள் பல உண்டு. அதில் குறிப்பிடத்தக்கது சூரபத்மனை வதம் செய்தது.

**"சூர் கொன்ற செவ்வேலாற் பாடி"** 15

**12) முதிர் கடவுள்**

தவறு செய்தால் தெய்வம் தண்டிக்கும் என்ற கூற்று நம்முடைய பழமையான மரபுகளில் ஒன்றாகும்.

**"மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்**

**கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதும்"**16

ஊரின் பொதுவிடத்தில் மரா என்ற மரத்தில் அச்சம் தரக்கூடிய முதிர்ந்த கடவுள் இருக்கும். இப்பாடலில் முதிர் கடவுளாக குறிப்பிடப்படுவது குறிஞ்சி நில தெய்வம் முருகனைக் குறிக்கும்.

**13) சேவலங் கொடியோன்**

முருகனின் பாதத்தைத் தாமரை மலராகவும் மேனி அழகைப் பவளமாகவும் உடை குன்றின் மணி போல் மிளிர்வதாகவும் கூறப்படுகிறது. சேவல் சின்னம் பொறிக்கப்பட்ட கொடியை ஏந்தி உள்ளவன் அதனால் சேவலங் கொடியோன் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார் முருகன்.

**"சேவல் அம் கொடியோன் காப்ப**

**ஏம வைகல் எய்தின்றால் உலகே"**17

**தொகுப்புரை**

1) அன்பின் ஐந்திணைகள் களவு கற்பு என்னும் பொருண்மையில் மட்டும் இயற்றப்பட்டது அல்ல இறை நம்பிக்கை இறை பக்தி போன்றவற்றையும் எடுத்தியம்புகிறது.

2) பொதுவான நிலையில் ஆராய்வோமானால் ஒரு கடவுளுக்கு ஓரிரண்டு பெயர்கள் மட்டுமே இலக்கியங்களில் கூறப்படும். ஆனால் ஆழ்ந்து நோக்கும் போது முருகனுக்கு பல்வேறு பெயர்களால் சிறப்பு செய்திருக்கிறார்கள் புலவர்கள்.

3) அன்பின் ஐந்திணை இலக்கியங்கள் பழமையின் கருவூலமாகவும் மரபுகளின் நினைவூட்டலாகவும் பக்தி மார்க்கத்தின் துவக்கமாகவும் புராண செய்திகளின் களஞ்சியமாகவும் முருகப்பெருமான் திகழ்கிறார் என்பது போற்றத்தக்கதாகும்.

**அடிக்குறிப்புகள்**

1) தமிழ்த்தென்றல் திரு. வி. க., முருகன் அல்லது அழகு, பக்கம் 9.

2) நற்றிணை, கபிலர், பாகம் 2, பாடல் 225, பக்கம் 131.

3) குறுந்தொகை, கபிலர், பாடல் 1, பக்கம் 5.

4) கலித்தொகை, முல்லைக்கலி, நல்லுருத்திரன், பாடல் 104, பக்கம் 460.

5) குறுந்தொகை, தீன்மதி நாகனார், பாடல் 111, பக்கம் 267.

6) நற்றிணை, பாடல் 173, பக்கம் 805.

7) அகநானூறு, எருக்காட்டூர் தாயங்கண்ணனார், பாடல் 149, பக்கம் 454.

8) நற்றிணை, மதுரைப் பெருமருது இளநாகனார், பாடல் 251, பக்கம் 243.

9) அகநானூறு, பெருந்தலை சாத்தனார், பாடல் 13, பக்கம் 37.

10) நற்றிணை, மதுரைக் கண்ணத்தனார், பாடலின் 351, பக்கம் 648.

11) குறுந்தொகை, பெருஞ்சாத்தனார், பாடல் 263, பக்கம் 61.

12) ஐங்குறுநூறு, கபிலர், குன்றக்குறவன் பத்து, பாடல் 259, பக்கம் 98.

13)ஐங்குறுநூறு, கபிலர், வெறிப் பத்து, பாடல் 248, பக்கம் 81.

14)ஐங்குறுநூறு, கபிலர், வெறிப் பத்து, பாடல் 250, பக்கம் 84.

15)கலித்தொகை, மருதன் இளநாகனார், பாடல் 93, பக்கம் 400.

16)குறுந்தொகை, கபிலர், பாடல் 87, பக்கம் 213.

17)குறுந்தொகை, கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார், பக்கம் 1.

**துணை நூற்பட்டியல்**

1) முருகன் அல்லது அழகு, திரு வி. கலியாண சுந்தரனார், பூம்புகார் பதிப்பகம், சென்னை 600108. பதிப்பு 2002.

2) நற்றினை மூலமும் விளக்க உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை 600108. பதிப்பு 2010.

3) சங்க இலக்கியம் அகநானூறு பாகம்-1, உரையாசிரியர் முனைவர் இரா. செயபால், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை 600098. பதிப்பு 2013.

4) சங்க இலக்கியம் குறுந்தொகை, உரையாசிரியர் முனைவர் வி. நாகராசன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை 600098. பதிப்பு 2017.

5) செவ்விலக்கியக் கருவூலம் ஐங்குறுநூறு, உரையாசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை 600017. பதிப்பு 2008 .

6) சங்க இலக்கியம் கலித்தொகை, உரையாசிரியர் முனைவர் அ. விசுவநாதன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை 600098. பதிப்பு 2017.